www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6

ந.க.எண் 017731 / இ1 /2015 நாள் 24.08.2016

| | | |
|---|---|---|
| பொருள் | - | தொடக்கக்கல்வி – அரசு / ஊராட்சி ஒன்றிய / நகராட்சி தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் / தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தம் கல்வித்தகுதியை தொடக்கக் கல்வியில் 1 முதல் 8 வகுப்பு வரை கற்பிக்கப்படும் பாடங்களில் பட்டம் பெற்றால் மட்டுமே ஊக்க ஊதிய உயர்வு அனுமதித்திட அறிவுரைகள் வழங்குதல்– சார்ந்து. |
| பார்வை | 1. | அரசாணை (நிலை) எண்.42, கல்வி நாள். 10.01.69 |
| | 2 | அரசாணை நிலை எண்.747 நிதி (ஊதியக்குழு) நாள் 18.08.1986 |
| | 3 | அரசாணை (நிலை ) எண் 1023, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 09.12.1993 |
| | 4 | அரசாணை (நிலை) எண் 134, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள் 15.06.2007 |

------

இவ்வியக்கக் கட்டுப்பாட்டில் உள்ள அரசு/ ஊராட்சி ஒன்றிய / நகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள்/ தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது கல்வித்தகுதியை உயர்த்திக்கொள்ள உயர்கல்வி பயின்று பட்டம் பெற்ற பின்னர் அவ்வாசிரியர்களுக்கு பார்வை–1 முதல் 3 வரை உள்ள அரசாணைகளின்படி அதிகபட்சமாக இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் (நான்கு ஊதிய உயர்வுகள்) (Two Incentive increments (i.e) four advance increments) அனுமதிக்கப்படுகிறது

2) பார்வை 4 ல் காணும் அரசாணை பத்தி 4ல் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" 01.01.2007 முடிய இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் எந்த பாடத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருந்தாலும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கான பெயர் பட்டியலில் இத்தகையவர்களின் பெயர்களை சேர்த்து கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கலாம்

நிபந்தனை

i ) 01.01.2007–க்குப் பிறகு இதர பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படி பதவி உயர்வு சலுகை நீட்டிக்கப்பட மாட்டாது.

ii ) இவ்வாணைகள் உதவி பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும்

iii) ஒரு சில நிகழ்வுகளில் ஒரு சில இதர பாடங்களில் சமீப காலத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு நிலை இறக்கம் செய்து மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர்களால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளனர். எனவே இந் நிகழ்வுகளைத் தனி வழக்காகக் கருதி நிலை இறக்க ஆணைகளை இரத்து செய்து மீளவும் பட்டதாரி / தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கலாம் " என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.Padasalai.Net



3) மேற்காணும் அரசாணையில் 01.01.2007 முதல் இடைநிலை ஆசிரியர் மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் எந்த பாடத்தில் இளங்கலை பட்டம் பெற்றிருந்தாலும் பட்டதாரி ஆசிரியர் மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்விற்கு 01.01.2007 க்குப் பிறகு இதர பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படி பதவி உயர்வு சலுகை நீட்டிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் தொடக்கக்கல்வியின் கீழ் பணி புரியும் இடைநிலை ஆசிரியர்கள் / தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்ள 1 முதல் 8 ம் வகுப்பு வரை கற்பிக்கும் முதன்மைப் பாடங்களான( தமிழ், ஆங்கிலம், அறிவியல், கணக்கு, சமூக அறிவியல்) பாடங்களை பட்டப்படிப்பில் பயின்று உயர் கல்வித் தகுதி பெற்றால் மட்டுமே ஊக்க ஊதிய உயர்வு பெற இயலும். தொடக்கக் கல்வியின் கீழ் தமிழ், ஆங்கிலம், அறிவியல்,கணக்கு, சமூக அறிவியல் ஆகிய பாடங்களைத் தவிர்த்து பிற பாடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாத நிலையில் 1 முதல் 8 வகுப்புகளுக்கு கற்பிக்கப்படாத பாடங்களைப் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தால் அவ்வாசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வோ, பதவி உயர்வோ வழங்க இயலாது என்ற விவரம் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

4) எனவே வணிகவியல், பொருளாதாரம், கணினி அறிவியல் போன்ற இதர பாடங்களை உயர் கல்வியாகக் கொண்டு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றால் ஊக்க ஊதிய உயர்வோ/ பதவி உயர்வோ வழங்க இயலாது என்ற விவரமும் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

5) இச் செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை உடன் அனுப்பி வைக்குமாறும் மற்றும் இச் செயல்முறையினை அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் சார்பு செய்து அவர்களது ஒப்புகையினைப் பெற்று தங்கள் அலுவலக கோப்பில் வைக்குமாறும் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்